**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**2025 - ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15- ம் நாள் திங்கள்கிழமை**

**திருமதி. N.மீனாட்சி, B.A.B.L., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் அவர்களால் உறுதிமொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | |
|---|---|---|
| பெயர் | : சுபாஷினி | அசல் வழக்கு எண்:46/2023 |
| க/ பெயர் | :தர்மராஜ் | பிரதிவாதி தரப்பு சாட்சி எண். 1 |
| வயது | : 46/2025 | |
| கிராமம் | : கூடலூர் | |
| வட்டம் | : நீலகிரி மாவட்டம் | |
| சமயம் | : | |
| தொழில் | : முதல்வர் (FAC) அரசு கலை மற்றும் அறிவியில் கல்லூரி, கூடலூர் நீலகிரி மாவட்டம். | |

<u>முதல் விசாரணை</u>

நான் முதல்வர் (FAC) அரசு கலை மற்றும் அறிவியில் கல்லூரி, கூடலூர் நீலகிரி மாவட்டத்தில் பணிபுரிந்து வருகிறேன். சமூக நீதிமன்றம் சாட்சி அழைப்பாணையை பெற்றுக்கொண்டு வருகை பதிவேடுடன் இன்று ஆஜராகியுள்ளேன். (சாட்சி கல்லூரி அடையாள அட்டை சமர்ப்பித்து சரிபார்க்கப்பட்டது)

எங்களது கல்லூரியின் மே 2022, ஜுன் 2022 மாதங்களுக்கான வருகை பதிவேட்டை கொண்டுவந்துள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி சின்னமாரிச்சாமி எங்களது கல்லூரியில் வணிகவியல் மற்றும் கணிணி பயன்பாட்டுத்துறையில் கௌவுரவ விரிவுரையாளராக பணிபுரிந்து வந்தார் என்றால் சரிதான். 01-06-2022-ம் தேதி கல்லூரிக்கு வந்துள்ளார் என்றால் சரிதான். வருகை பதிவேட்டில் 01-06-2022-ம் தேதி கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். 01-06-2022-ம் தேதியிலிருந்து 17-06-2022 ம் தேதி வரை வார விடுமுறை நாட்கள் தவிர தொடர்ந்து கல்லூரிக்கு வந்துள்ளார்என்றால் சரிதான். அந்த தேதிகளில் வருகை பதிவேட்டில் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். நீலகிரி மாவட்டம் கூடலூரிலிருந்துவால்பாறை வருவதற்கு சுமார் எவ்வளவு நேரம் ஆகும் என்றால் பஸ்ஸில் வந்தால் 10.30 மணி நேரம் முதல் 11.30 மணி நேரம் வரை ஆகும். கல்லூரி நேரம் என்ன என்றால் காலை 09.30 மணியிலிருந்து 03.30 மணி வரை கல்லூரி நேரம் ஆகும், சிலசமயங்களில் வேலை இருக்கும் போது 04.00 மணி ஆகும். பிரதிவாதி 2017-ம் ஆண்டு ஜுலை 26-ம் தேதி முதல் ஜுன் 2022-ம் வருடம் வரை எங்களது கல்லூரியில் பணிபுரிந்தார் என்றால் சரிதான். பிரதிவாதி 2022-ம் வருடம் மே மாதத்தில் எங்களது கல்லூரியில் தொடர்ந்து பணிபுரிந்தார் என்றால் சரிதான். மே மாத வருகை பதிவேட்டில் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். **நீலகிரி மாவட்டம், கூடலூர் அரசு கலை மற்றும் அறிவியில் கல்லூரியின் 2022-ம் வருடம் மே மாதம், ஜுன் மாதம்ஆகியவற்றிக்கான வருகை பதிவேடு மற்றும் 2017-ம் ஆண்டு ஜுலை மாதம், 2022-ம் வருடம் ஜுலை மாதங்களுக்கான வருகை பதிவேடு (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) (பி.வா.சா 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது )**

<u>வாதி தரப்பு குறுக்குவிசாரணை</u>

2017-ம் ஆண்டு எங்களது கல்லூரியில் பிரதிவாதி சேர்வதற்கு முன்பு வால்பாறை அரசு கலை மற்றும் அறிவியில் கல்லூரியில் பணிபுரிந்தார் என்றால் சரிதான். எங்களது கல்லூரிக்கு வால்பாறை அரசு கலை மற்றும் அறிவியில் கல்லூரியில் இருந்து பணிமாற்றத்தில் வந்தார் என்றால் சரிதான். வால்பாறை மற்றும் நீலகிரி பகுதிகள் மலை பிரதேசங்கள் என்பதால் அங்குள்ள கல்லூரிகளில் வழக்கமாக வகுப்பு நேரம் காலை 09.30 மணியிலிருந்து 02.00 மணி வரை என்றால் சரியல்ல. மழைக் காலங்களில் மற்றும் நீண்ட துாரத்திலிருந்து வரும் மாணவர்களை மட்டும் துறைதலைவரின் அனுமதியுடன் மதியம் 02.30 மணியளவில் செல்ல அனுமதிக்கப்படும். கூடலூர் அரசு கலை மற்றும்

அறிவியில் கல்லூரியில் இருந்து வால்பாறைக்கு சுமார் எத்தனை கிலோமீட்டர் என்றால் சரியாக தெரியாது. 200 கிலோ மீட்டருக்கு மேல் இருக்கும். பொதுவாக கல்லூரி வருகை பதிவேட்டில் காலை, மாலை இரு நேரமும் கையொப்பம் செய்வது வழக்கம் என்றால் இல்லை. கையொப்பம் வேறு, சுருக்கொப்பம் வேறு என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பதில் கடிதம் பிரதிவாதி சின்னமாரிச்சாமி 27-02-2024-ம் தேதிய கடிதத்திற்கு எங்களது கல்லூரியில் அதே தேதியில் கொடுக்கப்பட்ட பதில் கடிதம் என்றால் சரிதான். அந்த கடிதம் எனக்கு முன்பு இருந்த கல்லூரி முதல்வர் கொடுத்ததாகும். **சாட்சி ஒப்புக்கொண்டதால் (அந்த கடிதம் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது )** அந்த கடிதத்தில் 01-06-2022-ம் தேதி பிரதிவாதி சின்னமாரிச்சாமி சுருக்கொப்பம் மிட்டு பணிபுரிந்துள்ளார் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 27-02-2024-ம் தேதி பிரதிவாதி கல்லூரிக்கு அனுப்பிய கடிதம் நேரில் கொடுத்தாரா அல்லது தபால் மூலம் அனுப்பினாரா என்றால் அது எனக்கு தெரியவில்லை. 27-02-2024-ம் தேதியில் வால்பாறையிலிருந்து தபால் மூலம் கடிதம் அனுப்பியிருந்தால் அன்றைய தினமே கூடலூரில் உள்ள கல்லூரிக்கு கிடைக்க வாய்ப்பில்லை என்றால் சரிதான். வழக்கமாக மே மாத வாக்கில் கூடலூர் பகுதிகளில் மழை காலம் ஆரம்பித்துவிடும் என்றால் சரிதான். கூடலூரிலிருந்து வால்பாறைக்கு இரு சக்கர வாகனத்தில் வந்தால் எவ்வளவு நேரம் ஆகும், காரில் வந்தால் எவ்வளவு நேரம் ஆகும் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். பொதுவாக கல்லூரி பணியாளர்களுக்கு 1 அல்லது 2 மணி நேரத்திற்கு முன்பு கல்லூரியிலிருந்து செல்ல அனுமதி வழங்கப்படும் என்றால் அனுமதி கடிதத்தின் படி அதற்கான பதிவேட்டில் பதிவு செய்துகொண்டு அனுமதிக்கப்படும். அவ்வாறு அனுமதி வழங்கப்படும் நாட்களில் அது பற்றிய குறிப்பு வருகை பதிவேட்டில் குறிப்பு இருக்காது என்றால் சரிதான். 01-06-2022-ம் தேதி பிரதிவாதி கல்லூரியில் அனுமதி பெற்று சென்றாரா என்ற விவரம் என்னால் சொல்ல இயலாது என்றால் சரிதான். நான் தற்போது அந்த கல்லூரியில் முழு கூடுதல் பொறுப்பு முதல்வராக இருக்கிறேன் என்றால் சரிதான். 01-06-2022-ம் தேதி நான் அந்த கல்லூரியின் பேராசிரியராக பணிபுரிந்தேனா என்றால் இல்லை. நான், பிரதிவாதி, கல்லூரியின் முன்னாள் முதல்வர் ஆகிய மூவரும் ஒரே கல்லூரியில் பணிபுரிவதால் பிரதிவாதிக்கு ஆதரவாக நான் சாட்சியமளிக்கின்றேன் என்றால் சரியல்ல. நீதிமன்ற அழைப்பாணையின் படி ஆஜராகி சாட்சியமளிக்கிறேன்.

**மறு விசாரணை** : இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.